உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 06.06.2026 • மலர் 04 • இதழ்: 157 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 06.06.2026 • Vol : 04 • Issue : 157 • Page : 4 • Rs. 5/-

சுற்றுச்சூழல் பாதுகாப்பே எதிர்கால முதலீடு

பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு

டெல்லி, ஜூன் 6
உலக சுற்றுச்சூழல் தினம் (World Environ ment Day) ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 அன்று உலகம் முழுவ தும் கொண்டாடப்படு கிறது. பூமியைப் பாது காக்கவும், சுற்றுச்சூ ழல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 1972 இல் ஐக்கிய நாடுகள் சபையால் இது தொடங்கப்பட்டது

அந்த வகையில் அ னு ச ரி க் க ப் ப டு ம் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்க ளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். சுற் றுச்சூழலைப் பாது காப்பதில் இந்தியா வின் தொடர்ச்சியான முயற்சிகளை பற்றி குறிப்பிட்டு உள்ள தோடு, பசுமைப் பரப்பை அதிகரித்தல் மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான உறுதி மொழியை நாட்டு மக் கள் எடுக்க வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதி விட்டுள்ள பிரதமர் மோடி, உலக சுற்றுச்சூழல் தினத் தில் அனைவருக்கும் எனது நல்வாழ்த்து கள். சுற்றுச்சூழல் பாது காப்பில் மிகுந்த ஈடு பாடு கொண்ட அனைவரையும் நான் ப ா ர ா ட் ட விரும்புகிறேன். நமது சுற்றுச்சூழலைப் பாது காப்பதற்கும், நிலை யான வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை மீண் டும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நாள் இது வாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த பத் தாண்டுகளில் நமது அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள், சுற்றுச்சூழலை மேம்ப டுத்த நாம் செய்து வரும் பணிகளைப் பறைசாற்றுகின்றன. பசுமைப் பரப்பை விரி வுபடுத்தியது முதல் ப ல் வே று வி ல ங் கி ன ங் க ளின் எண்ணிக்கையை அதி கரித்தது வரை பல விஷயங்கள் இந்தியா வின் முக்கிய வெற்றிக ளில் அடங்கும். கூட்டு முயற்சிகள், கொள் கைகள், அறிவியல் மற்றும் புத்தாக்கத்தின் மீதான நம்பிக்கை ஆகி யவை எவ்வாறு நமது சுற்றுச்சூழலை மேம்ப டுத்த முடியும் என் பதை நம் நாட்டு மக் கள் நிரூபித்துள்ளனர் என்றும், நமது பன்மு கச் சூழல் அமைப்பு னங்களுக்கும் வாழ்வா கள் எண்ணற்ற உயிரி தாரங்களுக்கும் ஆதர வளிக்கின்றன எனவும் கூறி உள்ளார்.

தஞ்சாவூர் மாநகராட்சியில் முதல் ஐ ஏ எஸ் அதிகாரி பதவி ஏற்பு

மக்களின் அடிப்படைப் பிரச்சினை களுக்கு முன்னுரிமை அளித்து தீர்வு காணப்படும் புதிய கமிஷனர் தீபனா விஸ்வேஸ்வரி பேட்டி

தஞ்சாவூர் ஜூன் 6
மக்களின் அடிப்படைப் பிரச் சினைக ளுக்கு முன்னுரிமை அளித்து தீர்வு காணப்படும் என்று தஞ்சாவூர் மாநகராட்சி யின் கமிஷனராக பதவி ஏற்ற முதல் ஐ ஏ எஸ் அதிகாரி தீபனா விஸ்வேஸ்வரி கூறினார்

தஞ்சாவூர் நகராட்சிகடந்த 2014 ஆம் ஆண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல அதிகாரிகள் ஆணையர் களாக பணி யாற்றிய நிலையில் தற்போது முதல் முறையாக ஐஏஎஸ் அதிகாரி ஒருவர் மாந கராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டு ள்ளார் மாநகராட்சி ஆணையராக இருந்து கண்ணன் மாற்றப்பட்டு தீபனா விஸ்வேஸ்வரி நியமிக்கப் பட்டுள்ளார், அவர் பதவியேற்றுக் கொண்டார்

பின்னர் அவர் செய்தியாளர்களி டம் கூறியதாவது:

எனது சொந்த ஊர்திண்டுக்கல் மாவட் டம். நான் 2019 ஆம் ஆண்டு ஐஏஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்றேன். தமிழகத் தின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றி யுள்ளேன் இதற்கு முன் எல்காட் நிறுவன த்தில் செயல் இயக்குனராக பணி யாற்றி வந்தேன். தற்போது பணி யிட மாற்றத் தின் அடிப்படை யில் தஞ்சா வூர் மாநகராட்சி ஆணை யராக பொறுப்பேற் று ள் ே ளன் தஞ்சாவூர் மாநகராட்சியின் முதல் ஐஏஎஸ் அதிகாரி என்ற அந்தஸ்தில் ஆணைய ராக பொறுப் பேற்றுள்ளது பெருமையாக கருதுகி றேன். மாநகராட்சியை குப்பையில்லா மாநகராட்சியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் , மாவட்டம் முழுவதும் பசுமை சூழல் நிலவுவது போல மாநக ராட்சி பகுதிகளில் பசுமையாக்க திட்டங் கள் செயல்படுத்தப்படும்

மேலும் தேவையான இடங்களில் அழகுப்படுத்தும் பணிகள் மேற் கொள் ளப்படும். தெரு விளக்குகள் சாலை வச திகள், குடிநீர் விநியோக ம், பாதாள சாக் கடை குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் உள்ளிட்ட மக்களின் அடிப்படை பிரச்சனை களுக்கு முன்னு ரிமை அளித்து தீர்வு காணப்படும் என் றார் இதனை யடுத்து மாநகராட்சியின் முன்னாள் ஆணையர் கண்ணன் மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் பலர் புதிய ஆணையரை சந்தித்து வாழ்த்து தெரிவித் தனர்.

தஞ்சாவூர் அருகே ஓரத்தநாட்டில் ரேஷன் கடையில் கலெக்டர் ரேவதி திடீர் ஆய்வு

தஞ்சாவூர் ஜூன் 6
தஞ்சாவூர் அடுத்துள்ள ஓரத்த நாட்டில் தமிழ்நாடு அர சின் கூட்டுறவு துறை சார்பில் ரேஷன் கடை மூலமாக உணவு பொருட்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஓரத்தநாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் புத்தூர் ரேஷன் கடையில் கலெக்டர் ரேவதி திடீர் ஆய்வு மேற் கொண்டார் அப்போது அவர் கடையில் உள்ள உணவுப் பொருட்களின் இருப்பு குறித்தும், உணவு பொருள்களின் வினியோகம் குறித்தும், உணவு பொருளில் தரம் குறித்தும் ஆய்வு செய்து, நியாய விலை கடையில் மூலமாக உண வுப்பொருட்கள் பெறும் குடும்ப அட்டைதாரர்கள் எண் ணிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார் மேலும் விற்பனை முனைய கருவி மூலம் உணவு பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது குறித்தும், அக்கருவி ப்ளூடூத் இணைப் பின் மூலம் எடை கருவி யுடன் இணைத்து சரியான எடை அளவுகள் பொதுமக்களுக்கு உணவுப் பொருட்கள் விநி யோகம் செய்யப்படுவது குறித்தும் ஆய்வு மேற்கொண் டார் மேலும் வாடிக்கையாளர் விவரம் அறிதல்,திட் டத்தின் மூலம் வாடிக் கையாளர்களின் ஆதார் எண்ணு டன் கைரேகை மூலம் வாடிக்கை யாளர்களிடம் விவரங் கள் விற்பனை முனைய கருவியுடன் இணைக்கப்பட்டுள் ளதா? என்பது குறித்தும் கலெக்டர் ஆய்வு மேற்கொண் டார்.

சேலம் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தின கொண்டாட்டம்

சேலம், ஜூன் 6
உலக சுற்றுச்சூழல் தினத் தையொட்டி சேலம் மாவட்ட ஆட்சியர் தலை மையில், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் லட் சுமணன் முன்னிலையில் தமிழ்நாடு மாசு கட்டுப் பாடு வாரியம் மற்றும் சேலம் ஆவின் நிர்வாகம் சார்பில் சேலம் ஆவின் பால் பண்ணை வளாகத் தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் சுற் றுச்சூழல் தினத்தை முன் னிட்டு வனப் பரப்பை அதி கரிக்கும் வகையில் பல்வேறு பகுதிகளில் மரக் கன்றுகள் நடப்பட்டு வரு கிறது. ஆண்டுதோறும் பூமி யின் சுற்றுச்சூழல் காரணிகளை அடிப்படை யாகக் கொண்டு ஏதேனும் ஒரு கருப்பொருளை மைய மாக வைத்து சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்ப டும். அந்த வகையில் இந்த ஆண்டு இயற்கையில் இருந்து உத்வேகம் பெறும் நோக்கில் சுற்றுச்சூழல் நமது எதிர்காலத்திற்காக என்ற கருப்பொருளை மையமாக வைத்து கொண் டாடப்பட்டது. உலக சுற் றுச்சூழல் தினத்தை ஒட்டி நேற்றைய தினம் பள்ளி மாணவ மாணவிகள் மற் றும் தன்னார்வலர்களின் பங்களிப்பு மூலமாக சேலம் ஆவின் வளாகத் தில் சுமார் 100க்கும் மேற் பட்ட மரக்கன்றுகள் நடப் பட்டது. சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை வளர்ந்து வரும் இளம் சமு தாயத்தினர் உணர வேண் டும் என்ற நோக்கத்துடன் பள்ளி மாணவ, மாணவிக ளுடன் இணைந்து மரக்கன் றுகள்நடப்பட்டது.நெகிழி பயன்பாட்டினை தவிர்த்து மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை உபயோகப் படுத்துவதை ஊக்குவிக் கும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரி யத்தின் மூலமாக இந்நி கழ்ச்சியில் பங்கேற்ற பள்ளி மாணவ மாணவிக ளுக்கு எவர்சில்வர் தண் ணீர் பாட்டில் வழங்கப்பட் டது. குறிப்பாக பள்ளி கல்வித்துறையின் சார்பில் நேற்றைய தினம் தொடக் கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி மற்றும் மேல்நி லைப் பள்ளிகளில் விதை பந்துகள் தயாரிக்கப்பட் டது. வரும் நாட்களில் விதை பந்துகள் உரிய இடங்களில் விதைத்திட ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. பூமி உயிரினங்க ளுக்கு தேவையான அனை த்தையும் தன்னகத்தே கொ ண்டுள்ள இயற்கையின் ஒரு அற்புதமான படைப் பாகும். பூமியில் உள்ள வளங்களை அனை த்து தரப்பினரும் முறையாக பயன்படுத்திட வேண்டும். நமது எதிர்கால சந்ததியின ருக்கு ஒரு பசுமையான ஆரோக்கியமான பூமியை விட்டு செல்ல பொது மக்க ளாகிய நாம் அனைவரும் நமது பங்களிப்பை வழங்க வேண்டும் இவ்வாறு கலெக்டர் கூறினார்.

தாட்கோ மூலம் வேலை வாய்ப்புடன் கூடிய சிறப்பு திட்டத்தில்

ஆதிதிராவிடர் ,பழங்குடியின இளைஞர்களுக்கு திறன் பயிற்சி: கலெக்டர் ரேவதி தகவல்

தஞ்சாவூர் ஜூன் 6
தாட்கோ மூலம் வேலை வாய்ப்புடன் கூடிய சிறப்பு திட்டத்தில் ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல் வேறு திறன் அடிப்படையி லான பயிற்சி வழங்க ப்பட உள்ளது என்று கலெக்டர் ரேவதி கூறியுள்ளார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி விடுத் துள்ள செய்தி குறிப் பில் கூறியிருப்பதாவது

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யின இளைஞர் களுக்கானபல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாகதாட்கோ மற்றும்தனியார்நிறு வனம் இணைந்து கணினி உதவியுடன் வடிவமைப்பு கணினி உதவியுடன் உற் பத்தி தொழில்துறை தானியக்கப் பயிற்சி உள்ளிட்ட தொழில் நுட்ப பயிற்சிகள் வழங்க உள்ளது இந்த பயிற்சியில் சேர ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடி இனத் தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மேலும் பி.இ.மெக்கானிக்கல் படிப்பு களில் தேர்ச்சி பெற்றிருக்க வே ண் டு ம் . விண்ணப்பதாரர்களின் வயது 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 3 லட்சத்திற்குள் இருக்க வேண் டு ம் .

இந்த பயிற்சியில் கால அவ காச ம் 90 நாட்களாகும் . பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் பயிற்சி நடைபெற உள் ளது. பயிற்சி யில் பங்கேற்கும் தகுதி யான நபர்கள் தங்கி பயிலும் வகையில் தேவையானசெலவினங்களில்தாட்கோ ஏ ற் கு ம் பயிற்சி வெற்றிகரமாக முடிக்கும் நபர் களுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் வேலை வாய்ப்பு ஏற்பாடு செய் யப்படும். ஆரம்ப மாத ஊதியம் ரூபாய் 25 ஆயிரம் முதல் ரூபாய் 40 ஆயிரம் வரைபெறும் வாய்ப்பு உள்ளது. இந்த பயிற்சியில் சேர விரும்பு வோர் தாட்கோwww.tahdco.comஎன்ற இணைய தளத்தில் பதிவு செய்து விண்ணப்பி க்க லாம்.இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிறுவன தலைவரின் 130வது பிறந்தநாள்

திருப்பூர்: ஜூன்6
இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிறுவன தலைவர் காயிதேமில்லத் அவர்களின் 130வது பிறந்தநாளை முன்னிட்டு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திருப்பூர் வடக்கு மாவட்டம் மங்கலம் பகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி அலுவலகத்தில் கட்சி கொடியேற்றப்ப ட்டது. பின்னர் மங்கலம் அரசுப்பள்ளிமாணவ மாணவிகளுக்கும் ,பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மங்கலம் நகர தலைவர் பி.ஏ.சாதிக்அலி கொடியேற்றினார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் மங்கலம்இப்ராஹிம் முன்னிலை வைகித்தார்.மேலும் இந்த நிகழ்ச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மங்கலம் நகர செயலாளர் முகமதுரபி,நகர பொருளாளர் அஸ்கர்அலி, மங்கலம்ஊராட்சிமன்றமுன்னாள்துணைத்தலைவர்தாஹாநசீர், ,இளைஞர்அணிமாநிலமுதன்மைதுணைத்தலைவர்சிராஜ்தீன், முஸ்லிம் யூத் லீக் மாவட்ட செயலாளர் சதாம்உசேன்,முஸ்லிம் யூத்லீக்பல்லடம்சட்டமன்றதொகுதிதுணைத்தலைவர்இர்பான் இளைஞர் அணி திருப்பூர் தெற்கு தொகுதி துணைத் தலைவர் s.s.ரஜாக், மாவட்டதுணைசெயலாளர்ஹாரிஸ்,திருப்பூர்வடக்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் அப்சர்அபுதாஹிர், வர்த்தக அணி நிர்வாகிகள் ரிபாய் ,அஸ்ரப் அலிமற்றும் இளைஞர் அணி ,நௌசாத்,மாணவர்அணிஜம்சீர்,வார்டுநிர்வாகிகள்மொகைதீன், அபிபுர்ரஹ்மான், அப்துல் ரஹ்மான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

அகஸ்தீஸ்வரம் அரசு பள்ளியில் மாணவமாணவிகளை இனிப்பு வழங்கி வரவேற்ற விஜய்வசந்த் எம்.பி.

தென்தாமரைகுளம், ஜூன், 6

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் நேற்று திறக்கப்பட்டதை முன்னிட்டு அகஸ்தீஸ்வரம் அரசு மேல் நிலைப் பள்ளியில் மாணவமாணவிகளை வரவேற் கும் விழா நடைபெற்றது. இதில் விஜய்வசந்த் எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவருக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ராமச்சந்திரன் சால்வை அணிவித்து வரவேற்றார்.

அதனை தொடர்ந்து தேசிய கொடியை ஏற்றி வைத்த விஜய்வசந்த் எம்.பி., பள் ளிக்கு வந்த மாணவமாணவிகளுக்கு இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். பள்ளி மாண வர்களிடையே படிப்பில் ஆர் வத்தை ஏற்படுத்தும் விதமாக கடந்த தேர்வில் பள்ளியில் அதிக மதிப் பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி, அவர்களுக்கு சால்வை அணிவித்து கவுரவித்தார். முன்ன தாக பள்ளி வளா கத்தில் ரூ8.44 லட்சம் மதிப்பில் 20252026 ம் ஆண்டிற்கான சத்துணவு திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட சமையல் கூடத்தை திறந்து வைத்து, சமையல் பணி களை அவர் தொடங்கி வைத்தார். இதில் பேரூராட்சி கவுன்சிலர் ஆதிலிங்க பெரு மாள், வர்த்தக காங்கிரஸ் செயலாளர் கிங் சிலின் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

களியக்காவிளை

தேசிய நெடுஞ்சாலையில் ஆபத்தான பள்ளங்கள்

களியக்காவிளை, ஜூன், 6

களியக்காவிளை கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை படந்தாலுமூடு ஆலு சந்திப்பில் ஏற்பட்டுள்ள பள்ளங் களை சீரமைக்க வாகன ஓட்டிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழக கேரளா எல்லை குமரி மாவட்டம் களியக்காவி ளையில் இருந்து கன்னியாகுமரி வரையிலான ரோட்டில் எப்பேதும் வாகனங்கள் சென்ற வண்ணம் உள்ளது. வெளி நாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் இந்த ரோட் டில் செல்ல வேண்டும். இவ்வாறு முக்கியமாக விளங்கும் ரோட்டில் ஆங்காங்கே குண்டும் குழியும் ஏற்பட்டுள்ளது. இதில் படந்தாலுமூடு, ஆலுமூடு சந்திப்பில் மிகவும் ஆழ மான பள்ங்கள் ஏற்பட்டுள்ளது. இந்த ரோட்டில் வாகன ஓட்டிகள் வாகனங்களை ஓட்டிச் செல்ல வேண்டிய கட் டாய சூழ்நிலையில் உள்ளனர். ஆகவே இந்த ரோட்டினை தார் அமைத்து சீரமைத்திட வாகன ஓட்டிகள் வலியுறுத்தி யுள்ளனர்.

சென்னை, அமைந்தகரை, அம்பாஸ்கைஒன் மாலில், முதல் முறையாக, முதல் தளத்தில் 8000 சதுர அடி பரப்பில், வசந்த் & கோ, கோலாக்கலமாக 147 வது கிளை திறப்பு விழா நடைபெற்றது. இயக்குனர் வினோத் வசந்தகுமார் திறந்து வைத்தார். மேலும் அம்பா ஸ்கைஒன் மேனேஜிங் பார்ட்னர் பழனியப்பன் கலந்துகொண்டு சிறப்பித்தார். விழாவின் போது கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. சுற்றுவட்டார அனைத்து பொதுமக்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

சென்னை ஜாபர்கான்பேட்டை, சோழன் தெரு பாரி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ இரத்தின கணபதி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்களகரமான பராபவ வருஷம் வைகாசி மாதம் சதுர்த்தி திதி, உத்திராட நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் சிம்ம லக்கனத்தில் ஸ்ரீ இரத் தின கணபதி மற்றும் பரிவார தெய்வங்களான வள்ளி தெய்வ சேனா சமேத பால சுப்பிர மணியர் துர்க்கை அம்மன், மஹாலட்சுமி, ஐயப்பன், வீரபத்த ஆஞ்சநேயர், விசாலாட்சி அம்பிகை, சமேத, காசி விசுவநாதர், கால பைரவர், தட்சிணாமூர்த்தி, நவக்கிரஹம், சீரடி பாபா ஏனைய ஆலய தெய்வங்கள் அனைத்துக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுவாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. சுவாமி தரிசனம் செய்த அனைத்து பக்த கோடிகளுக்கும் , ஆலயம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் பாரி நகர் சசி மற்றும் ரஞ்சனி பாலசுப்பிரமணியன் மேலும் ஆலய விழா குழுவினர் சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

சென்னை குன்றத்தூர், சேக்கிழார் நகரில் அமைந்துள்ள அருள்மிகு பூபாள விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரன புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. தெய்வப்புலவர் ஸ்ரீசேக்கிழார் பெருமானால் பிரதிஷ்டை செய்ய பெற்ற, ஸ்ரீ காமாட்சி அம்மை உடனுறை ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி திருக்கோவிலில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ பூபாள விநாயகருக்கு முன்மண்டபம், நூதன அம்பாள் ஆலயம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும், பராபவ வருடம் வைகாசி மாதம் உத்திராட நட்சத்திரத்தில் சங்கடஹர சதுர்த்தியில், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேக விழா ஆலய நிர்வாகிகளால் சிறப்பாக நடைபெற்றது. மேலும் ஆலய நிர்வாகிகள் மற்றும் சேக்கிழார் நகர், காமராஜர் வாழ் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தருமபுரி மாவட்டத்தில்

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம கூட்டம்

தருமபுரி ஜூன் 06

தருமபுரி மாவட்டத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதை தொடர்ந்து இலக்கியம்பட்டி, தடங்கம், கடகத்தூர் ஆகிய ஊராட்சிகளில் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் செயலாளர்கள் தலைமை யில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொதுமக்கள் குடிநீர் வசந்தி, சாலை வசதி,100 நாள் வேலை திட்டம் ஆகிய அடிப்படை வசதிகளை செய்து தருமாறு ஊராட்சி செயலாளரிடம் தெரிவித்தனர். உடனடியாக அனைத்து அடிப்படை வசதி களும் செய்து தருவதாக ஊராட்சி செயலா ளர் தெரிவித்தார். இந்த கூட்டத்தில் முக் கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சியில்

இ. கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் பேட்டி

திருச்சி, ஜூன் 6

திருச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் செய்தியாளர்களிடம் பேசுகையில்,பிரவீன்சக்கரவர்த்திபதிவுக்கும்தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அவர்கள் அந்தக் கூட்டணியில் இல்லை என்றும் தெரிவித்தார். பா.ஜ.க ஆட்சிக்கு வருவதைத்தடுக்க மட்டுமே த.வெ.கவிற்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்துள்ளதாகவும், திமுக தலைமையிலானகூட்டணியில்தொடர்ந்துநீடிப்பதாகவும் அவர் கூறினார். இது தொடர்பாக ஏற்கனவே மாநில செயலாளர் வீரபாண்டியன் தெரிவித்த நிலைப்பாடு இன்றும் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பதவி இல்லாததால் பாஜக கட்சி குறித்து குறை சொல்வது ஏற்புடையது அல்ல

திருப்பூர்: ஜூன் 06

விஜய்க்கு பிறகு எல்லோருக்கும் முதல் வன் படம் போல் சி.எம் ஆசை வந்து விட் டது. அண்ணாமலை முறைகேடுகள் குறித்து சிபிஐ , ஈடி விசாரணை மேற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும், இளைஞர்கள்மாயையை நோக்கி செல்லக் கூடாது. இந்து முன்னேற்ற கழக மாநில தலைவர் கோபிநாத் பேட்டி.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பல்வேறு இடர் பாடு மிக்க சூழலில் சுயநலமின்றி களமி றங்கி சேவையாற்றும் அமைப்பு.

அரசியலில் சேவையாற்ற பாஜக உருவாக் கப்பட்டது. அப்படிப்பட்ட தேசிய கட்சி யில் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை கடந்து தான் பயணிக்க வேண் டும். ஐ.பி.எஸ் பணியை முறையாக செய்ய வில்லை எப்படி அரசியலில் பணியாற்று வார் என 3 ஆண்டுகளுக்கு முன்பே பேசி இருந்தேன் அதுதான் இன்று நடைபெற் றது. கர்நாடகாவில் இவர் பணியாற்றிய போது யாருக்கும் இவரை தெரியாது. ஆனால் இவரின் படிப்புக்கு மரியாதை செலுத்தும் வகையில் பல சீனியர்கள் இருந்தும் மாநில தலைவர் பதவி வழங்கப் பட்டது.

குறைகளை நிவர்த்தி செய்யவே மாநில தலைவர் பதவி தரப்பட்டது. டெல்லியில் சென்று குறைசொல்ல கிடையாது. கூட் டணி கட்சிகளை அரவணைத்து செல்ல வேண்டும். அதை தவிர்த்து இறந்த தலை வர் குறித்து பேசியதே அதிமுக உடன் பிரச் சினை எழுந்தது. தற்போது பதவி இல்லா ததால் பாஜககட்சிகுறித்துகுறைசொல்வது ஏற்புடையது அல்ல. சோசியல் மீடியா இல்லாத போது தெருத்தெருவாக அலைந்து பலர் கட்சியை வளர்த்துள்ளனர் .மத்திய பிரதேசத்தில் பாஜக ஆட்சிக்கு வர சிவராஜ் சவுகான் தான் காரணம் அவர் கட் சிக்கு பணிந்து தேசிய அரசியலுக்கு சென் றார். பாஜகவில் உள்ள அனைவரும் கொள்கை சார்ந்த சகிப்புத்தன்மை உள்ள தலைவர்கள் மேலிடம் சொல்வதையே கேட்பார்கள். சுயநலத்திற்காக அண்ணா மலை பாஜகவை விட்டு பிரிந்து கட்சி துவங்குகிறார். பல முறைகேடுகள் செய் துள்ளார்.

மத்திய அரசு அவர் மீது ஈடி சோதனை செய்து சிபிஐ விசாரணை அமைக்க வேண் டும். மாநில உளவுத்துறையும் கண்கா ணிக்க வேண்டும் .கட்சியில் இருந்து வெளியேறிய உடன் பாஜகவிற்கு எதிராக பேசுகிறார். விஜய்க்கு பிறகு எல்லோருக் கும் முதல்வன் படம் போல் சி.எம் ஆக ஆசை வந்து விட்டது. விஜய் கூட கஷ்டப் பட்டு தான் வந்துள்ளார். இளைஞர்கள் தொலைநோக்காக சிந்திக்க வேண்டும். கொள்கையை சொல்லி அரசியல் செய்ய வேண்டும் பாஜகவில் இருந்து யாரையும் அழைத்துச் செல்லக் கூடாது. எத்தனை பேர் வந்தாலும் போனாலும் சாதாரண காற்று ஆலமரத்தை அசைக்காது. குடும்பத் தில் இருக்கும் பிரச்சனையை உள்ளிருந்து சரி செயய் வேண்டும் அதை விடுத்து குடும் பத்தை நடுத்தெருவில் விட்டு செல்லக்கூ டாது. அண்ணாமலை வேண்டுமானால் பிறர் பின் நின்று இயக்குவார். அவர் பின் யாரும் இல்லை. ஆடு மேய்த்தவர் ஐபிஎஸ் ஆனது சந்தோஷம். ஆனால் இப்போது இருக்கும் சொத்து எங்கிருந்து வந்தது. 1 லட்சம் பேர் சேர்ந்துள்ளனர் அதற்காகதான் இந்த செய்தியாளர் சந்திப்பு. மாயையை நோக்கி தமிழகம், இளைஞர்கள் செல்லக் கூடாது. என தெரிவித்தார்..

திருச்சி

கழிவறையில் வழுக்கி விழுந்த பாலியல் குற்றவாளி

திருசி, ஜூன் 6

திருச்சி இபி ரோடு பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை காரில் கடத்திச் சென்று மது கொடுத்து பாலியல் வன்புணர்வு செய்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மாரி செல்வம் என்பவரை பொதுமக்கள் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். கழிவறையில்வழுக்கி விழுந்த குற்றவாளி மாரி செல்வத்திற்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

துறையூர் சார்பதிவாளர் அலுவலகதில்

லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை

திருச்சி, ஜூன் 6

திருச்சி மாவட்டம் துறையூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் திருச்சி லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி மணிகண்டன் தலைமையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் இன்று திடீர் சோதனை நடத்தினர். துறையூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், பத்திரப்பதிவு பணிகளுக்காக நிலத் தரகர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் தொழிலதிபர்களிடம் அளவுக்கு அதிகமாக லஞ்சம் பெறப்படுவதாக எழுந்த புகார்களின் அடிப்படையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

ராமநாதபுரம்

அமமுக நகர் செயலாளர் மணிகண்டன் தலைமையில் பெரும்பாலான உறுப்பினர்கள் ராஜினாமா

ராமநாதபுரம், ஜூன் 6

ராமநாதபுரம் மாவட்டம் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ராமநாதபுரம் நகர் செய லாளர் ஜே.ஆர்.பி.மணிகண்டன் தன் பத வியை ராஜினாமா செய்து கூறியதாவது: 2026 தமிழகத்தில் நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட் டணி படுதோல்வியை சந்தித்ததின் விளைவாக ஒருங்கிணைந்த ராமநாதபுரம் நகர் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத் தின் பெரும்பான்மையான தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் வேண்டுகோளின் படி ராமநாதபுரம் நகர் செயலாளர் ஆகிய நான் வகித்து வந்த நகர் கழகச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்கிறேன்.

மேலும் ராமநாதபுரம் நகர் அம்மா மக் கள் முன்னேற்றக் கழகத்தின் பெரும்பான் மையான உறுப்பினர்கள் வகித்து வந்த பத வியை ராஜினாமா செய்து அடிப்படை பதவியில் இருந்தும் ஒட்டுமொத்தமாக விலகுவதாகவும் ஏழைகளின் தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் புரட் சித்தலைவி அம்மா அவர்களால் ஏழை எளிய மக்களுக்காக துவங்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தில் 17 வயது முதல் உறுப் பினராக பயணித்து 2016 டிசம்பர் 5ஆம் தேதி அம்மாவின் மறைவிற்குப் பிறகு மக் கள் செல்வர் டிடிவி தினகரன் 2018 மார்ச் மாதம் 15 ஆம் தேதி மேலூரில் தொடங்கப் பட்ட அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத் தின் உண்மை தொண்டனாக இணைந்து 2018 ஆர் கே நகர் இடைத்தேர் தல் முதல் 2026 நடைபெற்ற சட்டமன்ற தேர்தல் வரை கழகத்தின் வெற்றிக்காக உண்மையாக உழைத்து கழகத்தின் மாவட்ட வர்த்தக அணி பொருளாளராக மாவட்ட வர்த்தக அணி செயலாளராக ராம நாதபுரம் ஒருங்கிணைந்த நகரக் கழகச் செயலாளராக பயணித்து வந்த நான் இன்று முதல் என்னை விடுவித்துக் கொள்கி

றேன்"

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் நாம் வாழ்க புரட்சித்தலைவி அம்மா நாமம் வாழ்க இத் தனை ஆண்டு காலம் என்னுடன் பய ணித்த கழக உடன்பிறப்புகளுக்கும் ராமநா தபுரம் நகராட்சி நான்காவது வார்டில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார் பாக போட்டியிட்ட என் மனைவி தன பாண்டியம்மாள் அவர்களுக்கு குக்கர் சின் னத்தில் வாக்களித்து நகர் மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த நான்காவது வார்டு பொதுமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் உங்கள் மக்கள் சேவகராக உங்களுடன் பயணிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு அவர் கூறினார்.

பெருநாளி அருகே

துத்தி நத்தம் கிராமத்தில் விஷமுறிவு சித்தர் சித்தையா கோவில் கும்பாபிஷேக விழா

கமுதி ஜூன் 6

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுகா பெருநாளி அருகேதுத்தி நத்தம் கிராமத்தில் சித்தர் கோவில் கும்பாபிஷேகவிழா நடை பெறுகிறது விஷமுறிவு சித்தர் சித்தையா சாமிகளுக்கு கோவில் கட்டப்பட்டுள்ளது. கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து கோவில் கட்டி கும்பாபிஷேகம் நடைபெ றுகிறது. சித்தையரசித்தர் விஷகடி ஏற்பட் டவர்கள் வந்தால் மிளகு கொடுத்து விஷ முறிவுஏற்படுத்துவாராம்.இந்தகிராமத்தில் பாம்புமணிதர்களின் கண்களுக்கு புலப்ப டாதாம். பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து விஷகடி முறிவுக்கு வைத்தியம் செய் துகொள்கிறார்கள் சித்தரின் வாரிசுகள் இப்போது அந்த பணியை தொடர்ந்து செய் துவருகிறரர்கள்.ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.அதில்முக்கியதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வரும் பக்தர்களுக்கு குடிநீர் மற்றும் உணவு ஏற்பாடு செய்தல்.

வரும் வாகனங்களை எந்தவிதமான நெரிசலும் இல்லாமல் நிறுத்துதல்.

பக்தர்கள் தேவை அறிந்து அனைத்து ஏற் பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

நிர்வாக தலைவர் CSR. சோலைசாமி தலைமை வகித்தார். மற்றும் சிறப்பு அழைப்பாளராக சிவ சித்து குருமூர்த்தி, சென்னை தொழில் அதிபர்கள் சித்தையா கவுண்டர், சித்துசங்கர்வேலு கலந்து கொண்டனர். மேலும் செந்தூர் பாண்டி, விஜயராம், மூர்த்தி, மாரிச்சாமி, மருத்து வர் பரத் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் பூசாரி ராமசாமி கவுண்டர் நன்றி தெரிவித்தார்.

கோவை மாவட்டம் செட்டிபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட ஓராட்டுகுப்பை பகுதியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் கிரியப்பனவர் முன்னிலையில் கிரஷர் குவாரி உரிமையாளர் நலச்சங்கம் தலைமையில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் வனத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உலக சுற்றுச்சூழல் தினத்தில்

நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்ட கலெக்டர்

நாகர்கோவில், ஜூன்.6

உலகசுற்றுச்சூழல்தினத்தைமுன்னிட்டு, கன்னியாகுமரி மாவட்ட பள்ளிக்கல்வித்து றையின் சார்பில் அனைத்து பள்ளி வளாகங் களிலும் மரக்கன்றுகள் நடும் விழா நேற்று 5ம் தேதி நடைபெற்றது. நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் விழாவில் மாவட்ட மாவட்ட ஆட் சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடவு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு பசுமை தமிழ்நாடு திட் டத்தினை தீவிரமாகச் செயல்படுத்தி வரு கிறது. ஏற்கனவே பசுமை சூழல் நிறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில், அந்தச் சூழ லைத்தக்கவைக்கவும், மேலும் மேம்படுத் தவும் பல்வேறு திட்டங்கள் மாவட்ட நிர் வாகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் பள்ளி, கல்லூரிகளில் பசுமைச் சூழலை அதிகப்படுத்த மாவட்ட முதன் மைக் கல்வி அலுவலர் மூலம் அனைத்துப் பள்ளிகளுக்கும் மரக்கன்றுகள் நட அறிவு றுத்தப்பட்டுள்ளது. அதன்படி, பள்ளிக ளில் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் சிறப்பாகச் செயல்பட்டு வரும் 'பசுமைப் படையை மேலும் வலுப் படுத்த வாரம் ஒருமுறை 15 நிமிடங்கள் மாணவர்களுக்குப் புவி வெப்பமயமாதல் குறித்தும், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்க ளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இளம் வயதிலேயே மாணவர்களுக்குச் சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்த் துவதன் மூலம், எதிர்காலத்தில் அவர்கள் மேற்கொள்ளும் அனைத்து வளர்ச்சிப் பணிகளிலும் பசுமையை ஒரு கருத்தாகக் கொண்டுசெயல்படுவார்கள். இந்தநிகழ்வு பள்ளிகளில் மட்டு மின்றி, மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும். மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, தங்கள் வீடுகள் மற்றும் நண்பர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தூதுவர்களாகச் செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப், நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மரக்கன் றுகள் நட்டு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாணவ மாணவியர் கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண் டார்கள். நடைபெற்ற நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் பயிற்சி ர.மோனிகா, மாவட்ட கல்வி அலுவலர் தனியார்பள்ளிகள் அஜிதா, எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப் பள்ளி கிஷோர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண் டார்கள்.

ஜனநாயக புரட்சி ஏற்பட்டுள்ளது பணநாயகம் தோற்கடிக்கப்பட்டு உள்ளது

திருப்பூர்: ஜூன் 06

திமுக அணுகுமுறை சரியில்லை என் பதே தொண்டர்கள் கருத்தாக உள்ளது. மதி முக அவைத்தலைவர் அர்ஜுனராஜ் பேட்டி தமிழகத்தில் ஜனநாயக புரட்சி ஏற்பட்டுள் ளது. பணநாயகம் தோற்கடிக்கப்பட்டு உள் ளது.

இந்த ஆட்சி 5 ஆண்டு ஆட்சி செய்ய வேண்டும் என மதிமுக விரும்புகிறது. மதி முக இனி தங்கள் சின்னத்தில் தான் போட் டியிடுவோம்.

தேர்தல் சமயத்தில் கூட்டணி குறித்து முடிவு செய்வோம். எத்தனையோ ஜாம்ப வான்கள் போனாலும் இன்றும் மதிமுக உண்மை தொண்டர்கள் எங்களோடு உள் ளார்கள். திமுக அணுகுமுறை சரியில்லை என தொண்டர்கள் கருத்து உள்ளது என தெரிவித்தார்.

தனியார் கம்பெனியில்

ரூ.37.5 லட்சம் மதிப்பிலான பிவிசி மூலப்பொருள் திருட்டு

ஸ்டோர் மேனேஜர் தலைமறைவு; போலீஸ் வலைவீச்சு

கோவை ஜூன்:06

கோவை விளாங்குறிச்சி பகுதியில் உள்ள தனியார் நிறுவனமான பாலி பைப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சுமார் 15 வருடமாக செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் 37.5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பிவிசி மூலப்பொருட்களைத் திருடி கோவையில் உள்ள பைப் மாஸ்டர் என்ற மற்றொரு நிறுவனத்திற்கு கள்ளச்சந்தையில் விற்றுவிட்டு, கணக்கு புத்தகங்கள் மற்றும் சிசிடிவி ஹார்டு டிஸ்க்குடன் தலைமறைவான ஸ்டோர் மேனேஜர் முருகானந்தம் (34) என்பவரை போலீசார் தீவிரமாக போலீசார் தேடி வருகின்றனர்.

இதுகுறித்து கோவில்பாளையம் காவல் நிலையத்தில் பாலி பைப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாளர் அளித்த புகாரில் போலீஸ் தரப்பில் முதல் தகவல் அறிக்கையில் கூறப்படுவதாவது: கோவை விளாங்குறிச்சி பகுதியில் செயல் பட்டு வரும் 'பாலி பைப்ஸ் இந்தியா பிரை வேட் லிமிடெட்' என்ற நிறுவனத்திற்கு சென்னையைச் சேர்ந்த வினய்கிராவத் என் பவர் வெளிநாடுகளில் இருந்து பிவிசி ரெசின் மற்றும் சுண்ணாம்பு உள்ளிட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்து வருகிறார். இந்த மூலப்பொருட்கள் விளாங்குறிச்சி ரத்தினகிரி நகரில் உள்ள குடோனில் வைக்கப்பட்டு, அங்கிருந்து பல்வேறு நிறுவனங்களுக்கு சப்ளை செய் யப்பட்டு வந்தது.

தணிக்கையில் அம்பலமான மோசடி: இந்த குடோனில் பாலி பைப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஸ்டோர் மேனேஜர் திருச்சி தொட்டியத் தைச் சேர்ந்த முருகானந்தம் (34) என்பவர் கடந்த 10 ஆண்டுகளாக ஸ்டோர் மற்றும் டிரான்ஸ்போர்ட் மேனேஜராகப் பணி யாற்றி வந்தார். இவர் மூலப்பொருட்களை விநியோகம் செய்ய தனக்குச் சொந்தமான இரண்டு சரக்கு வாகனங்களைப் பயன்ப டுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 2026 பிப்ரவரி 21 ம் தேதி நிறுவனத்தின் வருடாந்திர கணக்கு தணிக்கை (Audit) நடைபெற்றது. அப் போது குடோனில் இருந்த இருப்பைச் சரி பார்த்தபோது, கம்பெனிக் குச் சொந்தமான சுமார் 52.500 டன் பிவிசி ரெசின் மூலப்பொருட்கள் குறை வாக இருந்தது கண்டு பிடிக் கப்பட்டது. இதன் மதிப்பு சுமார் 37.5 லட்சம் ரூபாய் ஆகும்.

ஹார்டு டிஸ்க்குடன் மேனேஜர் முருகானந்தம் த லை ம றை வு : தணிக்கை நடப்பதற்கு முந் தைய நாள் முதலே ஸ்டோர் மேனேஜர் முருகானந்தம் பணிக்கு வராமல் தலைம றைவாகியுள்ளார். இதனால் சந்தேகமடைந்த கம்பெனி நிர்வாகம், குடோனில் இருந்த சிசிடிவி கேமரா பதிவு களை ஆய்வு செய்தது. அதில், கடந்த பிப் ரவரி 20ம் தேதி மதியம் முருகானந்தம் கம் பெனிக்குத் தெரியாமல் வரவுசெலவு கணக்கு புத்தகங்கள், முக்கிய ஆவணங் கள் மற்றும் சிசிடிவி பதிவுகள் அடங்கிய 'ஹார்டு டிஸ்க்' (Hard Disc) ஆகியவற்றைத் திருடிச் சென்றது தெரியவந்தது. மேலும், முறையான ஆவணங்கள் இன்றி நிறுவனத் தின் மூலப்பொருட்களைத் தனது சொந்த வாகனங்களில் ஏற்றிச் சென்று, கள்ளச்சந் தையில் விற்றுப் பணத்தைச் சுருட்டியதும் அம்பலமானது.

இதுகுறித்து கம்பெனி மேலாளர் கோவில்பாளையம் காவல் நிலையத்தில் எழுத்துப்பூர்வமாகப் புகார் அளித்துள் ளார். புகாரின் பேரில், நிறுவனத்திற்குத் தெரியாமல் 37.5 லட்சம் ரூபாய் மதிப் புள்ள பொருட்களைத் திருடி மோசடி செய்த ஸ்டோர் மேனேஜர்

முருகானந்தம் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து, அவரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர். மேலும் திருடப்பட்ட பிவிசி மூலப்பொருட்களை கோவையில் உள்ள பைப் மாஸ்டர் என்ற மற்றொரு நிறு வனத்திற்கு கள்ளச்சந்தையில் விற்றதை அடுத்து அந்நிறுவனத்தை நிர்வ கித்து வந்த விக்ரம் சிங்கை போலீசார் கைது செய்தனர்.

வாஸன் கண் மருத்துவமனை மற்றும் தமிழக வணிகர் சம்மேளனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை, இந்தியா ஜூன் 6,

வாஸன் கண் மருத்துவமனை மற்றும் தமிழக வணிகர் சம்மேளனம் இடையே மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் விழா

குரோம்பேட்டையில் உள்ள வாஸன் கண் மருத்துவமனையில் நடைபெற்றது. இந்த விழாவில் வாஸன் கண் மருத்துவம னையின் நிர்வாகிகள் மற்றும் தமிழக வணி கர் சம்மேளன நிர்வாகிகள் கலந்து கொண் டார்.

தமிழக வணிகர் சம்மேளனத்தின் தலை வர் பி. தமிழ்செல்வம் தலைமையிலும்

வாஸன் கண் மருத்துவமனையின் தலைமை இயக்க அதிகாரி (COO) டாக்டர் கமல்பாபு முன்னிலையிலும் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் , தமிழ்நாடு வணிகர் சம் மேளனத்தின் மாநில பொதுச் செயலாளர் கே. ஜீவானந்தம் பேசியபோது, இங்கு கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் மூலம் ஆயிரக்கணக்கான வணிகர் குடும்பங்களும் பயனடைவார்கள் என் றும் வாஸன் கண் மருத்துவமனையின் அதி நவீன மருத்துவ சேவைகள் அவர்களுக்கு சென்றடையும் என்றும் விரிவாக பேசி னார் . மேலும் தமிழ்நாடு வணிகர் சம்மே ளனத்தின் மாநில மற்றும் மாவட்ட நிர்வா கிகள், மாநில துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட முக் கிய நிர்வாகிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். வாஸன் கண் மருத்துவம னையின் பணியாளர்கள் விழா ஏற்பாடு களை சிறப்பாக செய்திருந்தனர்.

மருங்காபுரி அருகே

குடும்பத்தகராறு பெண் தற்கொலை

திருச்சி, ஜூன் 6

திருச்சி மாவட்டம், மருங்காபுரி வட்டம் வெள்ளை பிச்சம்பட்டியைச் சேர்ந்த உஷாபிரியா (21) என்பவர், ஆறு மாதங்களுக்கு முன்பு புதுக்கோட்டை மாவட்டம், அகரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மணியைதிருமணம் செய்து கொண்டார். இரண்டு நாட்களுக்கு முன்பு கணவன் மனைவி இடையே ஏற்பட்ட பிரச்சனை காரணமாக தாய் வீட்டில் இருந்த உஷாபிரியா, தனது தோட்டத்தில் அரளி விதையை சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

மணப்பாறை சுகம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுகுறித்து வளநாடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

துறையூரில்

மரக்கன்றுகளை நட்டு வைத்த நீதிபதிகள்

திருச்சி, ஜூன் 6

திருச்சி மாவட்டம் துறையூர் நீதிமன்ற வளாகத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. துறையூர் சார்பு நீதிமன்ற நீதிபதிவிஜய்கார்த்திக்தலைமையில்,மாவட்ட உரிமைகள் நீதிபதிஅன்புமுன்னிலையில்நடைபெற்றஇந்தநிகழ்வில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். வழக்கறிஞர்கள் சங்க தலைவர் முத்துக்குமார், செயலாளர் செல்லதுரை, பொருளாளர் சசிகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குமரி

தனியார் பள்ளிகள் கல்வி கட்டணங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்: கலெக்டர் உத்தரவு

நாகர்கோவில், ஜூன் 6

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வகை தனியார் பள்ளிகளில் கட் டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட்டணத்தை பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் அறியும் வகையில் வெளிப்ப டையாக பார்வைக்கு வைக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் பிரதாப் அறி வுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது:

தனியார் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் செயல்படும் அனைத்து வகை சுயநிதிப் பள்ளிகளிலும் கல்வி கட்ட ணத்தை தவிர இதர கட்டணத்தை வசூலிக்கக் கூடாது என ஏற்கனவே தமிழக அரசால்அறிவுறுத்த ப்பட்டுள்ளது.

அனைத்து தனியார் நர்சரி பிரைமரி மெட்ரிக், சிபிஎஸ்இ மற்றும் இதரபிறவாரியப்பள்ளிகளின்முதல்வர்களுக்கும், பள்ளிகளில் கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கல்வி கட் டணத்தினை பொது மக்கள் பார்வையிடும் வகையில் விளம்பரம் செய்தும், சார்ந்த பள்ளிகளின் இணைய தளத் தில் வெளியிடவும் மற்றும் மாணவர்களின் சேர்க்கைக் கான விண்ணப்பப் படிவத்தில் வகுப்பு வாரியாக கல்விக் கட்டணத்தினை அச்சடித்து வழங்கப்பட வேண்டும். அவ் வாறு வழங்குவதை அனைத்து நர்சரி பிரைமரி, மெட்ரிக், சிபிஎஸ்இ மற்றும் இதர பிற வாரியப் பள்ளிகளும் கட்டா யம் பின்பற்றப்பட வேண்டும். அவ்வாறு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தனியார் பள்ளிகளின் விளம்பரப் பலகைகளில் தங்களுடைய கல்வி கட்ட ணத்தை வெளிப்படைத் தன்மையுடன் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1) (b) பிரிவின்படி விளம் பரப்படுத்தப்பட வேண்டும் என ஆணை வழங்கப்பட் டுள்ளது.

மேற்காணும் விவரங்கள் பள்ளிகளில் நடைமுறைப்ப டுத்தப்படுகிறதா என்பதை அனைத்து கல்வித்துறை அலு வலர்களால் பார்வையிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ் வாறு பள்ளிக் கட்டண விவரங்களை விளம்பரப்படுத்தாத தனியார் பள்ளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்., இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

நகரமன்ற தலைவர் லட்சுமிமாது தலைமையில்

தருமபுரி நகராட்சி கூட்டம்

தருமபுரி ஜூன் 06

தருமபுரி நகராட்சி கூட்டம் அறிஞர் அண்ணா நகர மன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அனைத்து வார்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டு அவர்களது வார்டுகளில் உள்ள குடிநீர் பிரச்சனை ,கால்வாய் வசதி ,தருமபுரி பழைய புறநகர் பேருந்து நிலையம் மற்றும் அதன்சுற்றியுள்ளபகுதிகளில்நாய்களால்பொதுமக்களுக்கு அதிக அளவில் தொல்லைகள் இருப்பதால் உடனடியாக நாய்களை பிடிக்க வேண்டுமென்று தெரிவித்தனர். நகர மன்ற உறுப்பினர்கள் முன் வைத்த கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக நகராட்சி ஆணையர். வசந்தா அவர்கள் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்தின் மூலம் கொண்டு வந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் துணை நகர மன்ற தலைவர் நித்ய அன்பழகன், மற்றும் நகரமன்றஉறுப்பினர்கள்கூட்டத்தில்கலந்துகொண்டனர்.

இரயில்வே பணிகளை துரிதப்படுத்துவதற்கான கூட்டம்: கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது

நாகர்கோவில், ஜூன்.6

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட இரயில்வே பகுதிகளை அகலப்படுத்துவ தற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங் கள் மற்றும் இரயில்வே மேம்பால பணி களைதுரிதப்படுத்துவதற்கானகலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்த லைவர் மு.பிரதாப், தலைமை வகித்தார். கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த் முன்னிலை வகித்தார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்திற்குட்பட்ட நுள்ளிவிளை பகுதி யில் அமைக்கப்பட்டு வரும் இரயில்வே மேம்பால பணிகளை விரைந்து முடிப்ப தோடு, பழுதடைந்துள்ள தற்காலியாக சாலைகளை சீரமைத்து, வாகனங்கள் செல் வதற்கும், பொதுமக்கள் சீரமம் இன்றி செல்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனசெயற்பொறியாளர்களுக்கு அ றி வு று த் த ப் ப ட் ட து . மேலும் நீண்ட நாள்களாக முடிக்கப்படாத ஒழுகினசேரி இரயில்வே மேம்பால பணி களை உடனடியாக முடித்து, வாகனங்கள் எளிதாக செல்ல நடவடிக்கை மேற் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. நாகர்கோ வில் டவுண் இரயில்வே நிறுத்தத்தினை நான்கு வழி இரயில்வே வழித்தடமாக மாற்றிட தேவையான, நிலங்களை கைய கப்படுத்துவது குறித்தும், செலவினங்கள் குறித்த திட்ட மதிப்பீடு வழங்குமாறும் இர யில்வே துணை முதன்மை பொறியாள ருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மார்த்தாண்டம் – விரிகோடு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகை யில் ஏற்கனவே மேம்பாலம் அமைக்க தீர் மானிக்கப்பட்ட இடத்தினை தவிர்த்து, புதிய இடத்தினை தேர்வு செய்து பணி களை துவக்கிட அனைத்து பணியாளர்க ளுக்கு அறிவுறுத்தப்படுவதோடு, கன்னி யாகுமரி முதல் களியக்காவிளை வரையிலான பழுதடைந்துள்ள இர யில்வே பாலங்கள் மற்றும் சாலைகளை சீரமைத்திட உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு கூறினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவ லர் பூங்கோதை, இரயில்வே துணை முதன்மை பொறியாளர் பவன்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியா ளர் (நிலம்) பத்மபிரியா, கோட்டபொறியா ளர் நெடுஞ்சாலை லிங்குசாமி (திருநெல் வேலி) , நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, கல்கு ளம் வட்டாட்சியர் ராஜேஷ், பொறியாளர் கள் தனி வட்டாட்சியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

குமரியில் கேரளாவுக்கு கடத்திய 1900 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்

நாகர்கோவில், ஜூன்.6

கும ரி மாவட்டத்தில் இருந்து கேரளா வுக்கு ரேஷன் அரிசி கடத்தலை தடுக்கும் வகையில் வருவாய்துறை சார்பில் அமைக் கப்பட்டுள்ள மாவட்ட பறக்கும் படை த னித் தாசில்தார் பாரதி தலைமையில் துணை வட்டாட்சியர் முத்துப்பாண்டி, ஓட்டுநர் ஏ.ஒய். ஜாண் பிரைட் குழுவினர் நேற்று அதிகாலை அகஸ்தீஸ்வரம் வட்ட பகுதியில் பொது விநியோகத் திட்ட கடத் தல் தடுப்பு ரோந்து பணியில் இருந்தனர். அப்போது மணக்குடி என்ற இடத்தில் தமி ழக பதிவெண் கொண்ட சொகுசு காரை நிறுத்தி சோதனை செய்தபோது, டிரைவர் தப்பி ஓடினார். பின்னர் சொகுசு காரை சோதனை செய்ததில் அதில் சுமார் 1500 கிலோ பொது விநியோக திட்ட அரிசி கேரளா மாநிலத்திற்கு கடத்திச் செல்ல இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கைப் பற்றப்பட்ட அரிசியை காப்புக்காடு அரசு கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது. கடத்தல் காரை விளவங்கோடு வட்டாட் சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத் தப்பட்டுள்ளது. அதேபோல் மணக்குடி பகுதியில் பழுதடைந்த கட்டிடத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொது விநி யோகத் திட்ட அரிசி சுமார் 400 கிலோ கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப் பட்ட அரிசியும் காப்புக்காடு அரசு கிட்டங் கியில் ஒப்படைக்கப்பட்டது.

புதிய ஆரம்பசுகாதார நிலையம் அமைக்க மயிலாடி பேரூராட்சி தலைவர் ஆட்சியரிடம் மனு

தென் தாமரைகுளம்,ஜூன்6.,

கன்னியாகுமரி மாவட்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவரை கன்னியாகுமரி மாவட்ட பேரூராட்சிகளின் தலைவர்கள் கூட்டமைப்பு சார்பாக நேற்று மாவட்ட ஆட்சியரைசந்தித்துவாழ்த்துதெரிவித்தனர் இந்நேரத்தில் மயிலாடி பேரூராட்சி தலைவர் விஜயலட்சுமி பாபு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு அளித்தார் அம்மனுதில் கன்னியாகுமரி மாவட்டம், மயிலாடி பேரூராட்சியானது 4.85 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட முதல்நிலை பேரூராட்சியாகும். மக்களின் முக்கிய தொழில் விவசாயம் மற்றும் கல் தொழில் ஆகும். சுற்றுவட்டாரபகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பேரூராட்சி பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையும் ஏதும் இல்லை இப்பகுதி பொதுமக்கள் தங்கள் தேவைக்கு பேருந்துமூலம்பிற இடத்திற்கு சென்று தான் மருத்துவம் பார்க்க வேண்டியுள்ளது. இதனால் கர்ப்பிணி பெண்கள்,குழந்தைகள்,மாற்றுதிறனாளிகள் மற்றும் முதியோர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

மேலும் கல்சிற்பத்தொழில் பெருமளவு நடைபெற்று வருவதால் சுமார் 3000 குடும்பங்களுக்கு மேல் கல்தொழில் பணி செய்து வருகின்றனர். இந்த தொழிலில் ஈடுபடும் அவர்களுக்கு மூச்சு பிரச்சனை, காசநோய் ஆகிய நோய்கள் ஏற்பட அதிகம்

வாய்ப்புள்ளது. கல்தொழில் செய்து வரும் சமயத்தில்எதிர்பாராதவிதமாகவிபத்துகள் ஏற்படும்போது உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் உயிரிழக்கும்நிலைமை உள்ளது. இதனால் மிகவும் இன்னலுற்று அருகிலுள்ள வேறு இடங்களுக்கு சென்றுதான் மருத்துவ வசதி பெறும் நிலையும் இருந்து வருகிறது. பேரூராட்சிக்குட்பட்ட சுப்பிரமணியபுரம் மெயின்ரோட்டில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் உள்ளது. எனவே இந்த இடத்தில் பொதுசுகாதார துறைக்கு நிலம் மாற்றம் செய்து தர வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

அருமனை அருகே

70 கிலோ குட்கா பறிமுதல்; ஒருவர் கைது

மார்த்தாண்டம், ஜூன் 6

அருமனை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதி யில் சட்டவிரோதமாக குட்கா விற்பனை நடைபெறுவ தாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், அரு மனை போலீசார் தீவிர சோதனை நடத்தினர்.

காவூர் கோணம் பகுதியில் அருமனை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்சுஜின் தலைமையிலானபோலீசார்வாகன சூழ்நிலையில் ஈடுபட்டு இருந்தபோது அந்த வழியாக வந்த பைக்கை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது அந்த பைக்கில் வெள்ளை சாக்கு பை ஒன்று காணப்பட் டது. சாக்கு பையை திறந்து பார்த்தபோது அதில் அரசால் தடை செய்யப்பட்ட 5 கிலோ எடை கொண்ட புகையி லைப் பொருட்கள் இருந்தது தெரிந்தது. பின்னர் பைக் ஓட்டிட்டு வந்த காரோடு, நம்பச்சான்விளை பகுதியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரின் மகன் அனீஸ் (32) என்ப வரை கைது செய்தனர்.

பின்னர் அவரது வீட்டில் சோதனை செய்தபோது விற்ப னைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த மேலும் 65 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப் பட்டது. அருமனை போலீசார் வழக்கு பதிவு செய்து அனிஷை கைது செய்தனர்.

குமரியில்

இ பைக் ஷோரூம் உரிமையாளரிடம் நூதன மோசடி: கோவை நிறுவன அதிகாரி மீது வழக்கு

குளச்சல், ஜூன். 6

குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி அருகே கடியப்பட்டணம் பகுதியை சேர்ந்தவர் தாமஸ் பிரிட்டோ (46). இவர் வெள்ளமோடி பகுதியில் எலக்ட்ரிக் பைக் எனப்படும் இ பைக் ஷோரூம் நடத்தி வருகிறார். இந்த நிலையில் தாமஸ் பிரிட்டோ கடந்த மாதம் கோவையில் உள்ள ஒரு நிறுவனத்தில் 21 இ பைக்குகளை வாங்க ஆர்டர் செய்தார். இதற்காக அவர் கோவை நிறுவனத்தின் வங்கி கணக்குக்கு மூன்று தவணையாக ரூபாய் 12 லட்சம் வரை அனுப்பியுள்ளார்.

இதை அடுத்து கடந்த 1ம் தேதி வெள்ளமோடிக்கு லாரியில் இ பைக் கொண்டுவரப்பட்டன. ஆனால் 21 பைக்குளுக்கு பதிலாக 11 பைக்குகள் காணப்பட்டன. இதனால் தாமஸ் பிரிட்டோ பைக்கை இறக்காமல் கோவையில் உள்ள நிறுவன அதிகாரிகளுக்கு போன் செய்தார். ஆனால் அங்கிருந்து சரியான பதில் அளிக்காமல் இருந்து வந்துள்ளனர். மேலும் சில நாட்களில் பைக்குகள் வந்து விடும் என கூறி காலம் தாழ்த்தி வந்ததாக தெரிகிறது.

இதை அடுத்து தான் ஏமாற்றப்படுவதை உணர்ந்த தாமஸ் பிரிட்டோ இது குறித்து வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் 21 இ பைக்குகளுக்கு பதிலாக 11 பைக்குகளைமட்டும்அனுப்பி வைத்துவிட்டு, மீதி 10 பைக்குகளை அனுப்பாமல் பண மோசடி செய்த கோவை பைக் நிறுவனத்தை சேர்ந்த சுஜித் என்பவர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் திறப்பு மாணவ மாணவிகள் உற்சாகம்; கலெக்டர் வரவேற்பு

தஞ்சாவூர் ஜூன் 6

தஞ்சாவூர்மாவட்டத்தில்உள்ளஅனைத்துபள்ளிகளிலும் முதல் நாளிலேயே மாணவர்களை வரவேற்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது .நீண்ட கோடை விடுமுறைக்கு பிறகு நண்பர்களை ஆசிரியர்களையும் சந்தித்த மாணவ மாணவிகள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வந்தனர் பள்ளி வளாகங்களில் உற்சாகமான சூழல் நிலவியதுபள்ளியின்நுழைவாயில்களில்மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், சில பள்ளி களில் மலர் தூவி வரவேற்பு அளிக்கப்பட்டது .ஆசிரியர்கள் மாணவ ர்கள் அன்புடன் வரவேற்று புதிய கல்வி ஆண்டுக்கான வாழ்த் துகளை தெரிவித்தனர்.

மேலும் புதிய கல்வி ஆண்டில் முதல் நாளிலேயே முதல் பருவத்திற்கான பாட புத்தகங்கள் மாணவ மாணவி களுக்கு வழங்கப்பட்டன. சீருடை, நோட்டு ,புத்தகங்கள் உள்ளிட்ட அரசின் நலத்திட்ட பொருட்களும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் காலை உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரம் குறித்து கலெக்டர் ஆய்வு செய்தார் இந்த நிகழ்ச்சியில் விஜய் சரவணன் எம்எல்ஏ, மாநகராட்சி ஆணையர் கண்ணன், முதன்மை கல்வி அதிகாரி பேபி, மாநகராட்சி கவுன்சில் செந்தில், பள்ளி தலைமை ஆசிரியை சுந்தரவள்ளி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

உலக சுற்றுச்சூழல் தினம் மேயர் தலைமையில் விழிப்புணர்வு

நாகர்கோவில் ஜூன் 6

உலகசுற்றுச்சூழல்தினத்தைமுன்னிட்டு, நாகர்கோவில் மாநகராட்சி தெற்கு மண்ட லம் தெங்கம்புதூர் பேரூராட்சி உள்ள மண் டல அலுவலகத்தில் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் திடக்கழிவு மேலா ண்மை விதிமுறைகள் – 2026 குறித்து நாகர்கோவில் மாநகராட்சி பொறுப்பு மேயர் மேரி பிரின்ஸி லதா தலைமையில் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளு க்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற் றது.இதில் மண்டல தலைவர் டாக்டர் முத் துராமன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை தொடர்ந்து உலக சுற்றுச்சூழல் தின உறுதிமொழி எடுக்கப் பட்டு, அப்பகுதி மக்களிடம் குப்பைகளை நான்கு வகைகளாகப் பிரித்து வழங்குவ தன் அவசியம் குறித்து விளக்கப்பட்டு, அதற்கான துண்டுப் பிரசுரங்கள் வழங்கப் பட்டன.

கரும்பாட்டூர் ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்

தென் தாமரை குளம்,ஜூன் 6.,

உலக சுற்றுசூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் கரும்பாட்டூர் ஊராட்சி அலுவலகம் அருகில் தனி அலுவ லர் பத்மா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை விதி கள் 2026 படி வீடுகள், கடைகள் மூலம் வழங்கப்படும் குப்பைகளை நான்கு வகை யாக பிரித்து தூய்மை காவலர்களிடம் வழங்குவது குறித்து தீர்மானம் நிறைவேற் றப்பட்டது. கூட்டத்தில் வசந்தா உதவி திட்ட அலுவலர்(வீடுகள்) மங்கம்மாள் ஊர் நல அலுவலர் , ஊராட்சி செயலர் காளியப் பன்,சுகாதார ஊக்குனர் அமிர்தேஷ்வரி,, தூய்மை பணியாளர்கள் பொது மக்கள் உள் பட பலர் கலந்து கொண்டனர்

குமரி மாவட்ட வனத்துறை சார்பில்

சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு மரக்கன்றுகளை நட்ட மாணவர்கள்

நாகர்கோவில் ஜூன் 6

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயி ரினகாப்பாளர் முனைவர். அன்புதலைமை யில், உதவி வன பாதுகாவலர் ஸ்ரீவல்சன் முன்னிலையில், அன்பழகன் வனச்சரக அலுவலர் ஏற்பாட்டில் வனச்சரக அலுவலர் வெங்கடேசன் மற்றும் வன பணியாளர்கள், இயற்கை தன்ஆர்வலர் சுதாமதி ரோஜாவ னம் பள்ளி தாளாளர் ,முதல்வர்,ஆசிரியர் கள் மற்றும் பள்ளி மாணவ மானவிகள் இணைந்து தேரூர் குளக்கரையில் மரக்கன் றுகள் நடப்பட்டு பள்ளி மாணவ மாணவிக ளுக்கு இயற்கை சுற்றுச்சூழலை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தேரூர் குளத்தில் நெகிழிகளை பள்ளி மாணவ மாணவிகளை வைத்து வனவர்கள் அஷோக், பாலசந்திகா மேற்பார்வையில் அப்புறப்படுத்த ப்பட் டது. மேலும் பள்ளி மாணவ மாணவிகளு டன் வனத்துறை இணைந்து நாகர்கோயில் அட்டா மார்க்கெட் ஊழியர்களுடன் உலக சுற்றுச்சூழல் தினத்தை குறித்து பேரணி நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், செம்பரசனப்பள்ளி ஊராட்சி, பெரியபாப்பனப்பள்ளி கிராம ஆற்றின் குறுக்கே, கட்டிகானப்பள்ளி முதல் பெரியபாப்பனப்பள்ளி கிராமம் வரை செல்லும் சாலையில் கனிமம் மற்றும் குவாரிகள் திட்டத்தின் கீழ், ரூ.45 இலட்சம் மதிப்பில் 17 மீட்டர் தூரத்திற்கு பாலம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ் குமார். நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, துணை ஆட்சியர். பயிற்சி .சாய்சைதன்யா ஜாதவ் உள்ளிட்ட பலர் உள்ளனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.